ஏப்ரல் 30

# *புனித ஐந்தாம் பத்திநாதர் (1504 – 1572)*

இவரது 19-ஆம் வயதில் புனித சுவாமிநாதரின் சபையில் சேர்ந்து துறவிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார். குருப்பட்டம் பெற்று 16 ஆண்டுகளாக குருத்துவ மாணவர்களுக்கு கல்வி கற்பித்து வந்தார். பின்னர் ஆயராகி கர்தினாலும் ஆனார். பாப்பானவர் இறந்ததும் இவர் 1566-ல் பாப்புவாக தேர்ந்தெடுக்கப்பட்டும், முன் போலவே தவ வாழ்வு நடத்தினார். கிரேக்க நாட்டில் உள்ள லெப்பான்றோ என்னும் இடத்தில் துருக்கியரின் படை பாளையம் இறங்கியிருந்தது. அவர்களுடைய படை மகா பெரிது. கிறிஸ்தவ வீரர்களோ சொற்பப் பேர். ஐரோப்பாவை கைப்பற்றி கிறிஸ்தவ மதத்தை அழிப்பதே துருக்கியரின் நோக்கம். பாப்பானவரோ வெற்றிக்காக இடைவிடாமல் செபித்து மாதாவை மன்றாடும்படி விசுவாசிகள் அனைவரையும் தூண்டினார். செபமாலையின் பயனாக வெற்றி கிடைத்தது. இதை புதுமையாக அறிந்த பாப்பானவர் "நமக்கு வெற்றி கிடைத்து விட்டது போய்க் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்" என்று உரோமை மக்களுக்கு அறிவித்ததோடு செபமாலை மாதா திருநாளையும் இவர் ஏற்படுத்தினார். இவருக்கு வேலை ஏராளமாக இருந்த போதிலும் நாள்தோறும் இருமுறை திருப்பேழையின் முன் முழந்தாளிட்டு நெடுநேரம் செபத்தியானம் செய்வார். ஏழைகளுக்கு ஏராளமாக தர்மம் கொடுப்பார். நோயாளிகளை வீடுகளிலும் மருத்துவமனைகளிலும் போய் சந்திப்பார்.

**சிந்தனை:**

கடந்த காலத்தில் தேவதாயின் செபமாலையானது திருச்சபையையும் உலகத்தையும் காப்பாற்றியிருக்கிறது. இப்போதும் அது காப்பாற்ற முடியும். அதை நம்பிக்கையுடன் செபிப்போம்.

**செபம்:**

திருச்செபமாலையானது இராக்கினியே, திருச்சபையையும் உலகத்தையும், காப்பாற்றும்.